2026 – பிப்ரவரி மாதம் 19–ஆம் தேதி வியாழக்கிழமை.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 230/2023*

*2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19–ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. K. மனோரஞ்சிதம் ,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | RW 1, காளமேகம் |
| தந்தையார் பெயர் | : | தங்கவேல் |
| ஊர் | : | நாரணமங்களம் |
| வட்டம் | : | ஆலத்தூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | பேருந்து ஓட்டுநர் பணி ஓய்வு |
| வயது | : | 63 |

<u>தேதி: **19.02.2026**</u>

<u>முதல் விசாரணை:–</u>

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

விபத்து சம்மந்தமாக மருவத்தூர் காவல் நிலையத்தில் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மீதான குற்ற வழக்கு குறித்து நான் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான் விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவுதான் காரணம் என்றும்

எனவே மேற்படி எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/-கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**